தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்
பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.
தலைமை இடம் - சென்னை.

**K.சந்திரசேகரன்**
**தலைவர்**

**R.சந்திரசேகரன்.**
**பொதுச்செயலாளர்**

**சுற்றறிக்கை / 20-2017** **29-11-2017**

அன்புடையீர்,

வணக்கம். 27.10.2017 தேதியிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்திருந்தபடி ஸ்விட்சர்லாந்து நாட்டில், ஜெனிவா நகரில் நடைபெற்ற PSI–யின் உலகத் தொழிற்சங்க மாநாட்டில் கலந்து கொண்டு 10.11.2017 அன்று காலை சென்னை திரும்பினோம்.

உலகத் தொழிற்சங்க மாநாட்டில் " கல்வி, கலாச்சாரம், ஊடகம்" ஆகிய துறைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட 2018 முதல் 2022 வரை 5 ஆண்டுகளில் PSI திட்டமிட்டுள்ள நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது தெற்காசிய நாடுகளின் சார்பில் பேசுவதற்கு நமது சங்கத்திற்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

தீர்மானத்தினை ஆதரித்து பேசிய நமது சங்கத்தின் பாங்கு, உலக நாடுகளைக் கவர்ந்து, நமது சங்க முத்திரையை பதிப்பதற்கு வாய்ப்பாக அமைந்தது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மாநாட்டின் போது ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபை கட்டிடத்தின் முன் தொழிற்சங்க உரிமைகளை வலியுறுத்தி உலக நாடுகள் சார்பில் நடைபெற்ற ஆர்பாட்ட ஊர்வலத்தில் நமது சங்கக் கொடியும் இணைந்திருந்தது என்பதையும், உலகத்தொழிலாளர் அமைப்பு அரங்கிற்குள் சென்று ஆளுமைக் குழு ( ILO – Governing Body) கூட்டம் நடைபெறுவதை நேரில் பார்த்திட வாய்ப்பு கிடைத்தது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஊதிய உயர்வு, வேலைபளு திருத்தம் சம்மந்தமாக, ஒப்பந்த முன்வடிவு ( Draft proposal) தருவதற்கான நடவடிக்கையினை வாரிய நிர்வாகம் மேற்கொண்டிருக்கையில், சென்னை ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு 24.11.2017 முதல் தேர்தல் நடத்தை விதிகள் அமுலுக்கு வந்துள்ளது. மின்சாரத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வுப் பிரச்சனை காலதாமதமாவதை தவிர்த்திட, தேர்தல் ஆணையத்தின் அனுமதியை நிர்வாகம் பெற வேண்டும் என வலியுறுத்தி வருகிறோம்.

மின்வாரியப் பணிவிதிகள் படி இளநிலை உதவியாளர் நியமனத்திற்கு கல்வித் தகுதி S.S.L.C. என்பது 50 ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறையில் இருந்து வந்தது. ஆனால் மின்வாரிய நிர்வாகம் திடீரென்று தனது 24.5.2014 தேதியிட்ட உத்திரவில் கல்வித்தகுதியை பட்டப்படிப்பு என்று மாற்றிவிட்டது. இதனால் மின்சாரவாரியத்தில் கருணை அடிப்படையில் நியமனம் பெற்று S.S.L.C. மட்டுமே படித்த நூற்றுக் கணக்கான அலுவலக உதவியாளர், ஆவண காப்பாளர், மஸ்தூர்கள் உள்முகத்தேர்வில் இளநிலை உதவியாளர் பொறுப்பை

பெறுவது தடை செய்யப் பட்டுவிட்டது. இவ்வாறு பாதிக்கப்பட்ட வாரியத்தின் கடைநிலையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு நிவாரணம் பெற்றுத்தர, நமது சங்கம் முயற்சி எடுத்தது. வாரிய உத்திரவை இரத்து செய்யவும், இளநிலை உதவியாளர் உள்முகத் தேர்வுக்கு கல்வித் தகுதியை S.S.L.C. ஆக கருத வேண்டும் என்று கோரியும், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து வாரிய உத்திரவிற்கு தடையை பெற்றிருந்தோம்.

நாம் தொடுத்த வழக்கு 23.11.2017 அன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு உள்முகத் தேர்வுக்கு பட்டப்படிப்பு என்பதை ரத்து செய்து விட்டு S.S.L.C. தொடர வேண்டும் என்ற நமது கோரிக்கை தள்ளுபடி செய்யப்பட்டது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். மேல் நடவடிக்கை குறித்து வழக்குறைஞர்களுடன் ஆலோசித்து வருகிறோம்.

24.11.2017 முதல் 26.11.2017 வரை ஜெய்ப்பூரில் PSI-யின் சார்பில் நடைபெற்ற “ ஒப்பந்தத் தொழிலாளர் பிரச்சனை” பற்றிய கருத்தரங்கில் நமது சங்கத்தலைவருடன், திரு.அபுத்தாயர், மண்டலச்செயலாளர். மதுரை மற்றும் திருமதி சாந்தி, வட்ட மகளிர் அணி செயலாளர், நாமக்கல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

களப்பிரிவு தொழிலாளர்களின் இருவழிப்பாதைப் பதவி உயர்வில் தற்போதைய நிலையினை விளக்கி தனியாக அறிக்கை வெளியிட்டுள்ளோம்.

நமது சங்கத்தின் 181-வது மாநிலச்செயற்குழுக் கூட்டம் 09.12.2017 அன்று சென்னையில் நடைபெறவுள்ளது.

தோழமையுள்ள

இ.சக்தி வேலன்

பொதுச்செயலாளர்

பெறுநர்.
கிளைச்செயலாளர்கள்,
கோட்டச்செயலாளர்கள்,
வட்டச்செயலாளர்கள்,
வட்டத்தலைவர்கள்,
மண்டலச்செயலாளர்கள், மற்றும்
மத்திய சங்கப்பொறுப்பாளர்கள்.

நகல் : செய்தி மடல்.